# தவக்காலம் 3ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

தந்தையின் ஆலயத்தை வியாபார தலமாக மாற்றிய செயலுக்காக வெகுண்டெழுந்த இயேசுவைப் போல் அநியாயச் செயலுக்கு எதிரான துணிவை வெளிப்படுத்தி, இயேசுவின் சிலுவைகளுக்குச் சான்று பகர இன்றைய தவக்காலம் 3ஆம் ஞாயிறு திருப்பலி அன்புடனே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

பொறுமை என்பது அவசியம் தான். ஆனால் அநியாயங்கள் நடக்கும்போது காட்டும் பொறுமை பாவத்தின் வேருக்கு நீருற்றுதல் போன்றதாகும்.

இயேசுவைப் போல் அமைதியோடு கூடிய அறச் செயல்களும், இன்முகத்தோடு கூடிய இடித்துரைத்தலும் சமுதாயத்தைப் பண்படுத்தும். பண்படுத்தும் பணியில் நாமும் பங்கேற்பாளராவோம்.

“வாழ்நாட்கள் நீடித்திருக்கும் பொருட்டு உன் தந்தையையும் தாயையும் மதித்து நட” என்று வாழ்வின் ஆழமான உண்மை நெறிகளையும், பயணிக்க வேண்டிய கடமைகளையும் விடுதலைப்பயண நூல் எடுத்துரைக்கிறது.

“ஒய்வுநாளை ஆண்டவருக்கு அர்ப்பணமாக்கு” என்கிறது விவிலியம். ஒரு நாளைக்கு 24 மணி நேரம் தந்த இறைவனுக்கு இரண்டு மணி நேரம் ஒதுக்குவதே நடவாத காரியமாகிறது சிலருக்கு. நாவினால் பிறரை கொலை செய்யாமலும், பிறருடையவற்றின் மேல் அதீத பற்றுக் கொள்ளாமையும், போதுமென்று வாழக் கற்றுக் கொள்ளவும் விரைவோம்.

“என் தந்தையின் இல்லத்தை சந்தைக்கூடமாக மாற்றாதீர்” என்றும் தன் உடலை ஆலயமாகக் கூறியது பற்றியும் நற்செய்தி எடுத்துரைக்கிறது. இயேசுவின் சாயலைத் தாங்கியுள்ள நாமும் ஆலயங்களே. அத்தகைய ஆலயங்களில் இறைவன் நிறைந்திருக்க வேண்டுமே அன்றி, இலாப நோக்கங்களும், ஏற்றத் தாழ்வுகளும், தேவையற்ற எண்ணங்களும் அல்ல.

நமது உடலாகிய ஆலயம் இறை மாண்புகளால் அலங்கரிக்கப்பட வேண்டும். உள்ளம் மகிழ்ச்சியால் புனையப்பட வேண்டும். வியாபாரக்கூடங்களாக இல்லாமல் இறைவன் வசிக்கும் ஆலயமாக வாழ வரம் வேண்டி இப்பலியில் இணைவோம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. “என் அன்பார்ந்த மகன் இவரே! இவருக்குச் செவிசாயுங்கள்” என்றவரே எம் இறைவா!

எம் தாயாம் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், பணியாளர்கள் அழைப்பிற்கேற்ற எளிய வாழ்வு வாழவும், இறைவனின் குரலை உணர்ந்து, உள்ளத்தின் நிறைவோடு மக்களுக்கு நற்செய்திப் பணியை வாழ்வாக்கிட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆபிரகாமை ஆசீர்வதித்தவரே எம் இறைவா!

எம் இந்திய நாட்டை ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள், அரசு அதிகாரிகள் நாட்டைச் சீரழிக்கும் போக்கைக் கைவிட்டு சீர்படுத்தும் வழியில் ஆட்சி மேற்கொள்ளவும், நாட்டின் வறுமை நிலையை மாற்றி வளப்படுத்த முயற்சி எடுக்கத் தேவையான நல்லறிவைத் தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நல் வழியில் வாழ அழைப்பவரே எம் இறைவா!

தவக்காலத்தை அனுசரிக்கும் நாங்கள் தானம், தவம் இரண்டினையும் மேற்கொள்ளவும், பசி, வேதனை, நோய்களில் வாடுவோரைக் கண்டு எங்கள் மனமுவந்து உதவி புரியும் மனம் தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. ஆபிரகாமை ஆசீர்வதித்தவரே எம் இறைவா!

எம் பகுதியை ஆசீர்வதித்து, தேவையான கால சூழலைத் தந்து வேளாண்மை ஏற்றம் பெறவும், குடும்பங்களில் அமைதி, சந்தோசம் நிறைவாகவும், படிக்கும் மாணவர்களின் எதிர்காலம் சிறக்கவும், இதயத்தின் வேண்டுதல்கள் நிறைவேறவும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com